



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2023) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2023) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரம், மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# உன் இலட்சியம் காப்போம்! அண்ணா!



**பு**விப்பரப்பில் சிறந்தவனே! சின்னக் காஞ்சி
புரத்தினிலே பிறந்தவனே! தமிழாய் பொங்கிச்
செவிப்பரப்பில் புகுந்தவனே! உலக மக்கள்
சிரம்வணங்கத் தகுந்தவனே! உரிமை வேட்கைத்
தவிப்படங்கத் "தமிழ்நாடு" பெயரைச் சூட்டித்
தலைநிமிர வைத்தவனே! சங்க காலக்
கவிப்புலவர் வரிகளைப்போல் தமிழர் நெஞ்சில்
கல்வெட்டாய் நிலைத்தவனே! எங்கள் அண்ணா!

மாடமணி மாளிகையின் மலர்மெத் தைமேல்
மஞ்சம்போட் டிருந்தஅர சியலை, நித்தம்
பாடுபடும் ஏழையர்தம் குடிசைக் குள்ளும்
பவனிவரச் செய்தவனே! பரண்மேல் வைத்த
ஏடுகளில் துயில்கொண்ட தமிழைத் தட்டி
எழுப்பியஎம் கோமானே! எட்டுத் திக்கும்
மேடைகளில் எதிரொலித்த விடியற் பாட்டே!
" மேதை" எனும் சொல்லுக்கோர் எடுத்துக் காட்டே!

" பங்காரு, நடராசர்" தமிழன் னைக்குப்
படையலிட்ட அறிவமுதே! பாசத் தேனே!
பொங்கார்வத் தம்பியர்க்குக் களத்தில் கூட
"பொறுமை"சொல்லித் தந்தவனே! மகர யாழில்
சங்கீதம் மீட்டதுபோல், சொற்பெ ருக்கில்
சந்தமழை பொழிந்தவனே! சரித்தி ரத்தின்
சிங்காத னத்தில்எம்மை அமர வைத்துச்
சென்றவன்நீ! ஆரியத்தை வென்ற வன்நீ!

வம்புக்கு வந்தாரைத் தன்வா தத்தால்
வசமாக்கிப் போட்டவனே! வடஆ திக்கக்
கம்பிக்குள் சிறைப்பட்ட மொழியை, நாட்டைக்
காப்பாற்றி மீட்டவனே! தினம்வி ழித்துத்
தம்பிக்கு நீவரைந்த கடித மெல்லாம்
தமிழுக்குக் கருவூலம் அன்றோ! எங்கள்
நம்பிக்கைச் சூரியன்நீ உதிக்கா விட்டால்
நாடேது? தமிழர்க்கு நாதி ஏது?

மாற்றலரை யும்கவர்ந்த மகத்து வம்நீ!
மனிதத்தின் புனிதம்நீ! வளம்குன் றாமல்
ஊற்றெடுத்த கற்பனையின் உறைவி டம்நீ!
உவமைகளின் கொள்ளிடம்நீ! புகழ்ப்பொன் னேட்டில்
காற்றடித்துச் சாயாத இமய மும்நீ!
காவியம்நீ! ஓவியம்நீ! காலத் தாயின்
நோற்றவத்தால் வந்துதித்த தவம கன்நீ!
நூற்றுக்கோர் ஊழிக்குப் பிறப்ப வன்நீ!

அண்ணா!நின் உரையில், தீ பரவச் செய்தாய்!
ஆயினும்அத் "தீ"பிறரை எரிக்க வில்லை!
கண்ணீரில் எழுதுகோல் நனைத்தே, ஈரக்
கதைபுனைந்தாய்! எனினும்அது கரிக்க வில்லை!
மண்மீதில் இறுதிஊர் வலம்உ னக்கு!
மழலைகளும் அன்றைக்குச் சிரிக்க வில்லை!
விண்ணே! நீ புதைந்துவிட்டாய் எனும்துன் பத்தை
விழுங்கிவிட்டோம்! அதுஇன்னும் செரிக்க வில்லை!

கடலலையின் தாலாட்டில், உப்புக் காற்றில்
கண்ணுறங்கும் அண்ணா!நின் பிறந்த நாளில்,
உடன்பிறப்புக் கூட்டத்தை விழித்துப் பார்நீ!
உணர்வலைகள் ததும்பியெழும் உற்சா கம்பார்!
அடல்மறவர்! ஆம், உன்றன் ஆசி பெற்ற
அன்புமகன் "தளபதி" இந் நாட்டுக் காகக்
கொடைவழங்கும் உழைப்பைப்பார்! ஓய்வில் லாத
கொள்கைநெடும் பயணத்தின் வெற்றி யைப்பார்!

நீதிபதி ஆசனத்தில் அமர்ந்தி ருக்கும்
"நேற்றையநம் சுப்பனைப்பார்! குப்ப னை"ப்பார்!
சாதிமதப் பேதமின்றிச் சண்டை யின்றிச்
"சமத்துவ புரங்கள்"எங்கும் மலர்வ தைப்பார்!
ஆதிமொழித் தமிழேஎம் உயிர் மூச் சென்றே
அறிவித்த ஆக்கம்பார்! தொன்று தொட்ட
வேதனையின் இருளனைத்தும் விலகி, இன்று
விவசாயி விழியில், ஒளி வெள்ளத் தைப்பார்!

ஆண்டவனுக் கருகில்போய் கருவ றைக்குள்
அர்ச்சகராய் நிற்கும்அந்த இளைஞ னைப்பார்!
பூண்டெழுந்த சபதத்தால் சிற்றூர் தோறும்
பொறியாளர், மருத்துவர்தம் "புதுமு கம்"பார்!
ஆண்டுதொறும், திங்கள்தொறும், கிழமை தோறும்
அல்ல!அல்ல! நாள்தொறும்ஓர் வளர்ச்சி யைப்பார்!
மீண்டும்இந்தத் தமிழகத்தைச் சுற்றிப் பார்நீ!
மீட்சிபெற்ற தாயகத்தின் மாட்சி யைப்பார்!

" படியரிசித் திட்டம்"என் றுரைத்தாய்! இன்று
பசியாறி மனம்குளிரும் மக்க ளைப்பார்!
"குடல்கருகும் வறுமைஒலி" என்றாய்! ஏழைக்
குடிசைக்குள் தொழிலாளர் உவகை நீ பார்!
வடபுலம்தான் வாழ்கிறதென் றுரைத்தாய்! தெற்கும்
வளர்கிறதே! இன்றந்த வனப்பை நீ பார்!
"கடமையிலே தவறாத முதல்வர்" என்றே
கைகூப்பி எழும், மக்கள் களிப்பி னைப்பார்!

"ஒப்பாரும் மிக்காரும் இலாத வண்ணம்
உயர்வாய்நீ! " என்றுரைத்த உன்ன தம்பார்!
"அப்பாவைப் போலபிடி வாதக் காரன்!
அரிமாவை நிகர்இளைஞன்! " என்றுன் நாவால்
எப்போதோ நீயுரைத்த இளைஞ னைப்பார்!
இன்றைக்கு "மாண்புமிகு முதல்வர்" ஆகித்
தப்பாமல் தொண்டுசெய்யும் உறுதி யைப்பார்!
" தலைவன்"என்றே நிமிர்ந்துநிற்கும் தகுதி யைப்பார்!

மடிமீதில் தூக்கிவைத்துக் கொஞ்சும் போதில்
"வருங்காலம் உன்காலம்" எனும்நின் வாழ்த்துப்
படியேபே ராற்றலினால் ஆட்சி செய்யும்
பக்குவம்பார்! " தளபதி"நற் பண்பி னைப்பார்!
இடிதாங்கி போல்நின்றே இயக்கம் காக்கும்
இனமானத் தொண்டர்களின் இன்மு கம்பார்!
கொடிதாங்கி "முப்பெரும் விழாவில்" வீரர்
கூட்டம்வந்தே "வேலூரில்" குவிந்தி டும்பார்!

கயலோடு, புலி,வில்லைக் கொடியில் தாங்கிக்
"கலைஞர்" அன்று புறப்பட்ட பயணம், இன்று
செயலாக்கம் பெற்றதண்ணா! "சமூக நீதி"
திசைதோறும் ஊடுருவும் செய்தி கேட்டே
உயிர், உள்ளம் சிலிர்த்திடநீ எம்மோ டில்லை!
உன்மீதில் ஆணை!இதோ கலைஞர் பிள்ளை!
புயல்வேகத் "தளபதி"யின் சேனை! ஆவி
போயினும்உன் இலட்சியத்தைக் காப்போம்! அண்ணா!



**- கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

### பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் படங்களுடன்

# இந்தி தினத்தைக் கண்டித்து கொல்கத்தாவில் பேரணி!

## வங்காளிகளுக்கான தேசிய அமைப்பு 'பங்களா பொக்கோ' நடத்தியது!

இந்தி ஏகாதிபத்திய ஒன்றிய அரசு, இந்தி பேசாத மக்கள் மீது 'இந்தி தினத்தை' திணித்துள்ளது. இதைக் கண்டித்து கொல்கத்தா நகரில், வங்காளிகளுக்கான தேசிய அமைப்பான 'பங்களா பொக்கோ' மாபெரும் பேரணி ஒன்றை நடத்தியது. பங்களா பொக்கோ அமைப்பின் பொதுச்செயலாளர் டாக்டர் கார்க சாட்டர்ஜி இது பற்றி குறிப்பிடும் போது செப்டம்பர் 14-ஆம் தேதியை கருப்பு தினமாக இந்தி பேசாதவர்களுக்கு அமைந்துள்ளது என்றார்.

ஒன்றிய அரசின் கூடுதல் ஆட்சி மொழியாக இந்தி அறிவிக்கப்பட்டதையடுத்து செப்டம்பர் 14-ஆம் தேதி கருப்பு தினமாக அறிவிக்கப்படுவது முக்கியத்துவம் பெறுகிறது. இந்தி அல்லாத பிற மொழிகள் அதன் தகுதியை இழந்து விடுவதன் மூலம், அந்த மொழிகள் யாவும் இந்தியாவின் இரண்டாம் தர மொழியாக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிடுகிறார். பங்களா பொக்கோ' அமைப்பு இது பற்றி குறிப்பிடும் போது, அனைத்து வரையறுக்கப்பட்ட மொழிகளுக்கும் இந்தி மொழிக்கு இணையாக அரசியலமைப்புத் தகுதி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது இந்தியா (INDIA); ஹிந்தியா (HINDIA) கிடையாது என்று குறிப் பிட்ட பங்களா பொக்கோ, தனது பேரணியில் 'இந்தி பேசாத மக்கள் ஒன்றிணைந்தால் அவர்களை தோற்க டிக்க முடியாது' என்ற மிகப்பெரிய பதாகை ஒன்றை ஏந்திச் சென்றது.

**அதில் இந்தி பேசாத மாநிலத் தலைவர்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பொட்டி ஸ்ரீராமுலு, படே சிங் மற்றும் கேசவ் தாக்கரே மற்றும் வங்காள தேசியத் தலைவர்களான சித்தரஞ்சன் தாஸ், சரத் சந்திரபோஸ், ஆசார்யா பிரபுல்ல சந்திரரே** ஆகியோர் உருவங்கள் அச்சடிக்கப் பட்டிருந்தன.




## தமிழகத்தில் 1,250 சிறப்புப் பேருந்துகள்!

சென்னை, செப். 16 -

தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தி மற்றும் வார இறுதி நாள்களை முன்னிட்டு பயணிகள் வசதிக்காக 1,250 சிறப்பு பேருந்துகள் இயக்கப் படவுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் வெளியிட்ட செய்தி: அதன்படி, நேற்று வெள்ளிக்கிழமை (செப்.15) சென்னையிலிருந்து தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 650 பேருந்துகள் இயக்கப்பட்டன. மேலும் சனிக்கிழமை (செப்.16) 200 பேருந்துகளும் இயக்கப்படும்.

மேலும் கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் மற்றும் பெங்களூரிலிருந்து தமிழகத்தின் பிற இடங்களுக்கு 400 பேருந்துகள் என மொத்தம் 1,250 சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று திங்கள் கிழமை (செப்.18) சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்பும் பயணிகளின் வசதிக்காக தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் தேவைகேற்ப சிறப்பு பேருந்துகள் இயக்கப் படவுள்ளது.

முன்பதிவு செய்யும் பயணிகளின் எண்ணிக்கைகேற்ப தேவைப்பட்டால் மேலும் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# நாகர்கோவில் மாநகரம், வடக்கு பகுதி, 13வது வட்டம் கிழக்கு பகுதி, 27, 29ஆகிய வட்டங்கள் - மேற்கு பகுதி, 31 வது வட்டம் ஆகிய வட்டக் கழகங்களுக்கு பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகரம், வடக்கு பகுதி, 13வது வட்டம் - கிழக்கு பகுதி, 27, 29ஆகிய வட்டங்கள் - மேற்கு பகுதி, 31 வது வட்டம் ஆகிய வட்டக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வட்டக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப் படுகிறார்கள்.

### வடக்கு பகுதி - 13வது வட்டம்

பொறுப்பாளர் - **மீ. முருகன்,** 26, சேரமான் புதுத் தெரு, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629 001.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் - 1.ஒய்.எஸ்.மதுபாலன், குண்ணுவிளை தெரு, 2. ரா.சுதாகர், சோழராஜா கோவில் தெரு 3. ஆ.நாகராஜன், கனகமூலம் புதுத் தெரு. 4. மு.முருகன், பிளியவிளைத் தெரு. 5. டி.நேசமணி, குன்னுவிளை, சாம்பவர் தெரு.

### கிழக்கு பகுதி - 27வது வட்டம்

பொறுப்பாளர் - **தா.கண்ணன்,** 42/24, நடராஜபுரம் வடிவீஸ்வரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629001.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் - 1. அ.சுப்பிரமணியன், கடல்மடத் தெரு, 2. ஜி.அய்யப்பன், தெற்கு ரத வீதி. 3.என்.சுப்பிரமணியன் (எ) பாபு, தெற்கு ரத வீதி. 4. ஏ.ஆனந்த், கண்ணார்குடி தெரு 5. எஸ்.பார்வதி, சாஸ்தான் கோவில் தெரு.

### கிழக்கு பகுதி - 29வது வட்டம்

பொறுப்பாளர் - **க.சதீஷ் மெர்வின்,** 33, கீழத் தெரு, கணேசபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629 002,

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் - 1. மா. பழனி, செட்டித் தெரு. 2. ஞா. ஆபேல், தென்று பன்னிமாடன் கோவில் தெரு. 3.என்.டி.பிரசன்னகுமார், சிதம்பரம் நகர். 4. பி.எஸ்.பி.சுரேஷ் பிரேம்குமார், கீழத் தெரு. 5. ரா. ராணி, புலர்விளை.

### மேற்கு பகுதி - 31வது வட்டம்

பொறுப்பாளர் - **அ. டென்னிஸ் மெர்லின்,** 25, அன்னை தெரசாள் தெரு, தளவாய்புரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் -629 004.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் - 1. அ. ஜெஸ்டின் பாஸ்கர், திருக்குடும்ப கோவில் தெரு. 2. சூ.சகாய ஜெரால், திருக்குடும்ப கோவில் தெரு. 3. ஜா. கிங்ஸ்லி, வடக்கு தெரு. 4. தா. லெஸ்டர் ராஜசேகர், கார்மல் தெரு. 5. ம. மேரி செலின், கோல்டன் தெரு.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.9.2023



தருமபுரி மேற்கு மாவட்டம் தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோவிலுக்கு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மலைமீது நடந்து சென்று கோயில் வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆய்வு செய்தார். உடன் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, அவைத்தலைவர் கே.மனோகரன், மாநில கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி, பேரூராட்சி துணை தலைவர் சூர்யா தனபால், அறங்காவலர் துறை அலுவலர்கள், குழு உறுப்பினர்கள்,மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.